## சங்கீதம் 1

1. துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,

2. **கர்த்தருடைய** வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

3. அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.

4. து ன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப் போல் இருக்கிறார்கள்.

5. ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை.

6. **கர்த்தர்** நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்.

- **அல்லேலூயா** என்ற வார்த்தையின் பொருள் ‘தேவனைத் துதி ’என்பதாகும்.



## சங்கீதம் 2

1. ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக் காரியத்தைச் சிந்திப்பானேன்?

2. **கர்த்தருக்கு** விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணின வருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய்ஆலோசனைபண்ணி:

3. அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மை விட்டு எறிந்து போடுவோம் என்கிறார்கள்.

4. பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார். ①

5. அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார்.

6. நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார்.

7. தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; **கர்த்தர்** என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்.

8. என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்.

9. இருப்புக்கோலால்
அவர்களை நொறுக்கி,
குயக்கலத்தைக் போல்
அவர்களை உடைத்துப்
போடுவீர் என்று சொன்னார்.

10. இப்போதும் ராஜாக்களே,
உணர்வடையுங்கள்,
பூமியின் நியாயாதிபதிகளே,
எச்சரிக்கையாயிருங்கள் .

11.பயத்துடனே **கர்த்தரைச்**
சேவியுங்கள், நடுக்கத்துடனே
களிகூருங்கள்.

12. குமாரன் கோபங்கொள்ளாமலும்,
நீங்கள் வழியிலே அழியாமலும்
இருக்கும்படிக்கு,
அவரை முத்தஞ்செய்யுங்கள்;
கொஞ்சக்காலத்திலே
அவருடைய கோபம்
பற்றியெரியும்; அவரை
அண்டிக்கொள்ளுகிற
யாவரும் பாக்கியவான்கள்.

**முக்கிய அதிகாரங்கள்:**

23 கர்த்தர்
என் மேய்ப்பராயிருக்கிறார்.

51 பாவ அறிக்கையின் ஜெபம்

100 துதியின் சங்கீதம்.

119 வேதவசனமாகிய
தேவனுடைய
வார்த்தையின் மகிமை.

145 மகிமையின் தேவனை
துதித்துப் போற்றுங்கள்.

26, 101 உத்தமம்

103 ஸ்தோத்திரம்




## சங்கீதம் 3

**(தாவீது தன் குமாரன்
அப்சலோமுக்குத் தப்பி
ஓடிப்போகையில் பாடின சங்கீதம்)**

1. **கர்த்தாவே**, என் சத்துருக்கள்
எவ்வளவாய்ப் பெருகியிருக்கி
றார்கள்! எனக்கு விரோதமாய்
எழும்புகிறவர்கள் அநேகர்.

2. தேவனிடத்தில் அவனுக்கு
இரட்சிப்பு இல்லையென்று,
என் ஆத்துமாவைக் குறித்துச்
சொல்லுகிறவர்கள்
அநேகராயிருக்கிறார்கள் ( சேலா)

3. ஆனாலும் **கர்த்தாவே**,
நீர் என் கேடகமும்,
என் மகிமையும், என் தலையை
உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்.

4. நான் **கர்த்தரை** நோக்கிச்
சத்தமிட்டுக் கூப்பிட்டேன்;
அவர் தமது பரிசுத்த
பர்வதத்திலிருந்து எனக்குச்
செவிகொடுத்தார். (சேலா)

5. நான் படுத்து நித்திரை செய்தேன்;
விழித்துக் கொண்டேன்;
**கர்த்தர்** என்னைத் தாங்குகிறார்.

6. எனக்கு விரோதமாகச் சுற்றிலும்
படையெடுத்து வருகிற
பதினாயிரம் பேருக்கும்
நான் பயப்படேன்.

7. **கர்த்தாவே**, எழுந்தருளும்,
என் தேவனே, என்னை இரட்சியும்.
நீர் என் பகைஞர் எல்லாரையும்
தாடையிலே அடித்து,
துன்மார்க்கருடைய பற்களைத்
தகர்த்துப் போட்டீர்.

8. இரட்சிப்பு **கர்த்தருடையது**;
தேவரீருடைய ஆசீர்வாதம்
உம்முடைய ஜனத்தின்மேல்
இருப்பதாக. ( சேலா)

(நெகினோத்தென்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)

1. என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்; நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.



2. மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப்படுத்தி வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள். (சேலா)

3. பக்தியுள்ளவனைக் **கர்த்தர்** தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்; நான் **கர்த்தரை** நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்.

4. நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள்; X உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக் கொண்டு அமர்ந்திருங்கள். ( சேலா)



5. நீதியின் பலிகளைச் செலுத்தி, **கர்த்தர்** மேல் நம்பிக்கையாயிருங்கள்.

6. எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று சொல்லுகிறவர்கள் அநேகர்; **கர்த்தாவே,** உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்

7 அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்.



8. சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்வேன்; **கர்த்தாவே,** நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்.

**எழுதியவர்கள்**

150 சங்கீதங்களில் 100 சங்கீதங்களை எழுதியவர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

- தாவீது அரசன் 70 க்கும் அதிகமான சங்கீதங்களையும்,
- ஆசாப் 12
- கோராகின் புத்திரர் 11
- சாலொமோன் 2
- மோசே 1
- ஏமான் 1
- ஈத்தான் 1



சங்கீதங்களை எழுதினார்கள்.

- 50 சங்கீதங்கள் யாரால் எழுதப்பட்டன என்று பெயர் கொடுக்கப்படவில்லை.

இப்படிப் பலராலும் எழுதப்பட்ட சங்கீதங்களின் தொகுப்புதான் சங்கீதப் புத்தகமாகும்.

(நெகிலோத்தென்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

1. **கர்த்தாவே,** என் வார்த்தைகளுக்குச் செவிகொடும், என் தியானத்தைக் கவனியும்.

2. நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்; என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்.

3. **கர்த்தாவே,** காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.

4. நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல; தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை.

5. வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலை நிற்கமாட்டார்கள்; அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்.

6. பொய் பேசுகிறவர்களை அழிப்பீர்; இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் **கர்த்தர்** அருவருக்கிறார்.

7. நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்திற்குள் பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்துகொள்ளுவேன்.

8. **கர்த்தாவே,** என் சத்துருக்களினிமித்தம் என்னை உம்முடைய நீதியிலே நடத்தி, எனக்கு முன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும்.

9. அவர்கள் வாயில் உண்மை இல்லை, அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது; அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி; தங்கள் நாவினால் இச்சகம் பேசுகிறார்கள்.

10. தேவனே, அவர்களைக் குற்றவாளிகளாகத் தீரும்; அவர்கள் தங்கள் ஆலோசனைகளாலேயே விழும்படி செய்யும்; அவர்கள் துரோகங்களினுடைய திரட்சியினிமித்தம் அவர்களைத் தள்ளிவிடும் ; உமக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்களே.

11. உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக.

12. **கர்த்தாவே,** நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளுவீர்.

பைபிளில்
நீளமான சங்கீதம் ***119***
(176 வசனங்கள்).
சிறிய சங்கீதம் ***117*** (2 வசனங்கள்).
மையமான வசனம் ***118:8***



(நெகினோத்தென்னும் வாத்தியத்தில் செமினீத்தென்னும் இராகத்தால் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப் பட்ட தாவீதின் சங்கீதம்.)

1. **கர்த்தாவே**, உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்துகொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்திலே என்னைத் தண்டியாதேயும்.

2. என்மேல் இரக்கமாயிரும் **கர்த்தாவே,** நான் பெலனற்றுப் போனேன்; என்னைக் குணமாக்கும் **கர்த்தாவே**, என் எலும்புகள் நடுங்குகிறது.

3. என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது; **கர்த்தாவே**, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர்.

4. திரும்பும் **கர்த்தாவே**, என் ஆத்துமாவை விடுவியும்; உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்.

5. மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?

6. என் பெருமூச்சினால் இளைத்துப்போனேன்; இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன்.

7. துயரத்தினால் என் கண்கள் குழி விழுந்துபோயிற்று, என் சத்துருக்கள் அனைவர் நிமித்தமும் மங்கிப்போயிற்று.

8. அக்கிரமக்காரரே, நீங்கள் எல்லாரும் என்னை விட்டு அகன்றுபோங்கள்; **கர்த்தர்** என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்.

**9.** **கர்த்தர்** என் விண்ணப்பத்தைக் கேட்டார்; **கர்த்தர்** என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார்.

10. என் பகைஞர் எல்லாரும் வெட்கி மிகவும் கலங்கிப்போவார்கள்; அவர்கள் பின்னாகத் திரும்பிச் சடிதியிலே வெட்கப்படுவார்கள்.

- இராஜரீக சங்கீதங்கள்
  2, 21, 45, 72, 110, 132
- பாவ அறிக்கையின் சங்கீதங்கள்
  6, 32, 38, 51, 102, 130, 143
- சத்துருக்களுக்கு நீதி சரிக்கட்டப்பட செய்யும் சங்கீதங்கள்
  35, 55, 58, 69, 101, 137
- சரித்திர சம்பந்தப்பட்ட சங்கீதங்கள்
  78, 81, 105, 106, 126.
- தேவனுடைய வார்த்தையின் மேன்மையைக் கூறும் சங்கீதங்கள்
  19, 119

(பென்யமீனியனாகிய கூஷ் என்பவனுடைய வார்த்தைகளினிமித்தம் தாவீது கர்த்தரை நோக்கிப் பாடின சிகாயோன் என்னும் சங்கீதம்.)

1. என் தேவனாகிய **கர்த்தாவே,** உம்மை நம்பியிருக்கிறேன்; என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும்.

2. சத்துரு சிங்கம்போல் என் ஆத்துமாவைப் பிடித்துக் கொண்டுபோய், விடுவிக்கிறவன் இல்லாமையால், அதைப் பீறாதபடிக்கு என்னைத் தப்புவியும்.

3. என் தேவனாகிய **கர்த்தாவே**, நான் இதைச் செய்ததும், என் கைகளில் நியாயக்கேடிருக்கிறதும்,

4. என்னோடே சமாதானமாயிருந்தவனுக்கு நான் தீமைசெய்ததும், காரணமில்லாமல் எனக்குச் சத்துருவானவனை நான் கொள்ளையிட்டதும் உண்டானால்,

5. பகைஞன் என் ஆத்துமாவைத் தொடர்ந்துபிடித்து, என் பிராணனைத் தரையிலே தள்ளி மிதித்து, என் மகிமையைத் தூளிலே தாழ்த்தக்கடவன் (சேலா)

6. **கர்த்தாவே**, நீர் உம்முடைய கோபத்தில் எழுந்திருந்து, என் சத்துருக்களுடைய மூர்க்கங்களினிமித்தம் உம்மை உயர்த்தி, எனக்காக விழித்துக் கொள்ளும்; நியாயத்தீர்ப்பை நியமித்திருக்கிறீரே.

7. ஜனக்கூட்டம் உம்மைச் சூழ்ந்துகொள்ளும்; அவர்களுக்காகத் திரும்பவும் உன்னதத்திற்கு எழுந்தருளும்.

8. **கர்த்தர்** ஜனங்களுக்கு நியாயஞ் செய்வார்; **கர்த்தாவே**, என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும்.

9. துன்மார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப்பண்ணும்; நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக; நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர்.

10. செம்மையான இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில் என் கேடகம் இருக்கிறது.

11. தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின் மேல் சினங்கொள்ளுகிற தேவன்.

12. அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார் ; அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை ஆயத்தப்படுத்தியிருக்கிறார்.

13. அவனுக்கு மரணாயுதங்களை ஆயத்தம்பண்ணினார்; தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்கினார்.

14. இதோ, அவன் அக்கிரமத்தைப் பெறக் கர்ப்பவேதனைப்படுகிறான்; தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிறான்.

15. குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான்; தான் வெட்டின குழியில் தானே விழுந்தான்.

16. அவன் தீவினை அவன் சிரசின் மேல் திரும்பும், அவன் கொடுமை அவன் உச்சந்தலையின்மேல் இறங்கும்.

17. நான் **கர்த்தரை** அவருடைய நீதியின்படி துதித்து, உன்னதமான **கர்த்தருடைய** நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

- மேசியாவின் சங்கீதங்கள் (ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது).
  2, 8, 16, 22, 40, 41, 45, 68, 69, 89, 102, 109, 110, 118.
- அல்லேலூயா சங்கீதங்கள்
  106, 111, 112, 113, 117, 125, 146, 147, 149, 150.
- ஆரோகண சங்கீதங்கள்
  எருசலேம் புனித ஸ்தலத்திற்கு யூதப்பண்டிகை காலங்களில் பாத யாத்திரை செய்த யாத்ரீகர்கள் மலைப்படிக்கட்டுகளில் ஏறிச் செல்லும்போது பாடும் பக்திப் பாடல்கள் **'ஆரோகண சங்கீதங்கள்'** என்று அழைக்கப்பட்டன.
  120 - 134

## சங்கீதம் 8

(கித்தீத் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)

1. எங்கள் ஆண்டவராகிய **கர்த்தாவே,** உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.

2. பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.

3. உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது,

4. மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.

5. நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.

6. உம்முடைய கரத்தின்
கிரியைகளின்மேல்
நீர் அவனுக்கு ஆளுகை தந்து,
சகலத்தையும் அவனுடைய
பாதங்களுக்குக்
கீழ்ப்படுத்தினீர்.

7. ஆடுமாடுகளெல்லாவற்றையும்,
காட்டுமிருகங்களையும்,

8. ஆகாயத்துப் பறவைகளையும் ,
சமுத்திரத்து மச்சங்களையும்,
கடல்களில்
சஞ்சரிக்கிறவைகளையும்
அவனுடைய பாதங்களுக்குக்
கீழ்ப்படுத்தினீர்.

9. எங்கள் ஆண்டவராகிய
**கர்த்தாவே,** உம்முடைய
நாமம் பூமியெங்கும் எவ்வளவு
மேன்மையுள்ளதாயிருக்கிறது.

**சேலா:**

இசையமைப்பில் பயன்படுத்தப்படும் இந்த வார்த்தையின் பொருள் இடைவேளை,அமைதி என்பதாகும். ஒரு பாடலைப் பாடும்போது ஒரு குறிப்பிட்ட வரியைப் பாடினபின் அதன் கருத்தை சற்று கவனமாக யோசித்துப் பார்க்க எடுத்துக்கொள்ளும் இடைவேளை **'சேலா'** என்று அழைக்கப்படுகிறது. சங்கீதப் புத்தகத்தில் இந்த வார்த்தை 71 தடவை வருகிறது.

## சங்கீதம் 9

(முத்லபேன் வாத்தியத்தில்
வாசிக்க இராகத்தலைவனுக்கு
ஒப்புவிக்கப்பட்ட தாவீதின்
சங்கீதம்)

1. **கர்த்தாவே,**
என் முழு இருதயத்தோடும்
உம்மைத் துதிப்பேன்;
உம்முடைய
அதிசயங்களையெல்லாம்
விவரிப்பேன்.

2. உம்மில் மகிழ்ந்து களிகூருவேன்;
உன்னதமானவரே,
உமது நாமத்தைக் கீர்த்தனம்
பண்ணுவேன்.

3. என் சத்துருக்கள்
பின்னாகத் திரும்பும்போது,
உமது சமுகத்தில் அவர்கள்
இடறுண்டு அழிந்துபோவார்கள்.

4. நீர் என் நியாயத்தையும்
என் வழக்கையும் தீர்த்து,
நீதியுள்ள நியாயாதிபதியாய்ச்
சிங்காசனத்தின்மேல்
வீற்றிருக்கிறீர்.

5. ஜாதிகளைக் கடிந்துகொண்டு,
துன்மார்க்கரை அழித்து,
அவர்கள் நாமத்தை
என்றென்றைக்கும் இல்லாத
படி குலைத்துப்போட்டீர்.

6. சத்துருக்கள் என்றென்றைக்கும்
பாழாக்கப்பட்டார்கள்;
அவர்கள் பட்டணங்களை
நிர்மூலமாக்கினீர்;
அவர்கள் பேரும்
அவர்களோடே
கூட ஒழிந்துபோயிற்று.

7. **கர்த்தரோ** என்றென்றைக்கும் இருப்பார்; தம்முடைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம் பண்ணினார்.

8. அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்த்து, சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதிசெய்வார்.

9. சிறுமைப்பட்டவனுக்குக் **கர்த்தர்** அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்.

10. **கர்த்தாவே**, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.

11. சீயோனில் வாசமாயிருக்கிற **கர்த்தரைக்** கீர்த்தனம்பண்ணி, அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்.

12. இரத்தப்பழிகளைக்குறித்து அவர் விசாரணை செய்யும்போது, அவைகளை நினைக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்.

13. மரணவாசல்களிலிருந்து என்னைத் தூக்கிவிடுகிற **கர்த்தாவே,** நான் உம்முடைய துதிகளையெல்லாம் சீயோன் குமாரத்தியின் வாசல்களில் விவரித்து, உம்முடைய இரட்சிப்பினால் களிகூரும்படிக்கு,

14. தேவரீர் எனக்கு இரங்கி, என்னைப் பகைக்கிறவர்களால் எனக்கு வரும் துன்பத்தை நோக்கிப்பாரும்.

15. ஜாதிகள் தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள்: அவர்கள் மறைவாய் வைத்த வலையில் அவர்களுடைய காலே அகப்பட்டுக் கொண்டது.

16. **கர்த்தர்** தாம் செய்த நியாயத்தினால் அறியப்படுகிறார்; துன்மார்க்கன் தன் கைகளின் செய்கையிலே சிக்கிக் கொண்டான் (இகாயோன், சேலா)

17. துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்.

18. எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை; சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப்போவதில்லை.

19. எழுந்தருளும் **கர்த்தாவே,** மனுஷன் பெலன்கொள்ளாதபடி செய்யும் ; ஜாதிகள் உம்முடைய சமுகத்தில் நியாயந்தீர்க்கப்படக் கடவர்கள்.

20. ஜாதிகள் தங்களை மனுஷரென்று அறியும்படிக்கு, அவர்களுக்குப் பயமுண்டாக்கும், **கர்த்தாவே.** (சேலா.)

# சங்கீதம் 10

1. **கர்த்தாவே**, ஏன் தூரத்தில் நிற்கிறீர்? ஆபத்து நேரிடுகிற சமயங்களில் நீர் ஏன் மறைந்திருக்கிறீர்?

2. துன்மார்க்கன் தன் பெருமையினால் சிறுமைப்பட்டவனைக் கடூரமாய்த் துன்பப்படுத்துகிறான்; அவர்கள் நினைத்த சதிமோசங்களில் அவர்களே அகப்படுவார்கள்.

3. துன்மார்க்கன் தன் உள்ளம் இச்சித்ததைப் பெற்றதினால் பெருமை பாராட்டி, பொருளை அபகரித்துத் தன்னைத்தான் போற்றி, **கர்த்தரை** அசட்டை பண்ணுகிறான்.

4. துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்; அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே.

5. அவன் வழிகள் எப்போதும் கேடுள்ளவைகள்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் அவன் பார்வைக்கு எட்டாமல் மிகவும் உயரமாயிருக்கிறது; தன் எதிராளிகளெல்லார் மேலும் சீறுகிறான்.

6. நான் அசைக்கப்படுவதில்லை, தலைமுறை தலைமுறைதோறும் தீங்கு என்னை அணுகுவதில்லையென்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்.

7. அவன் வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு.

8. கிராமங்களின் ஒளிப்பிடங்களிலே பதிவிருந்து, மறைவிடங்களிலே குற்றமற்றவனைக் கொல்லுகிறான்; திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக் கொண்டிருக்கிறது.

9. தன் கெபியிலிருக்கிற சிங்கத்தைப்போல மறைவில் பதிவிருக்கிறான்; ஏழையைப் பிடிக்கப் பதிவிருந்து, ஏழையைத் தன் வலைக்குள் இழுத்துப் பிடித்துக் கொள்ளுகிறான்.

10. திக்கற்றவர்கள் தன் பலவான்கள் கையில் விழும்படி அவன் பதுங்கிக் கிடக்கிறான்.

11. தேவன் அதை மறந்தார் என்றும், அவர் தம்முடைய முகத்தை மறைத்து, ஒருக்காலும் அதைக் காணமாட்டார் என்றும், தன் இருதயத்திலே சொல்லிக்கொள்ளுகிறான்.

12. **கர்த்தாவே**, எழுந்தருளும்; தேவனே, உம்முடைய கையை உயர்த்தும்; ஏழைகளை மறவாதேயும்.

13. துன்மார்க்கன் தேவனை
அசட்டைபண்ணி:
நீர் கேட்டு விசாரிப்பதில்லை
என்று தன் இருதயத்தில்
சொல்லிக்கொள்வானேன்?

14. அதைப் பார்த்திருக்கிறீரே!
உபத்திரவத்தையும்
குரோதத்தையும்
கவனித்திருக்கிறீரே;
நீர் பதிலளிப்பீர்; ஏழையானவன்
தன்னை உமக்கு ஒப்புவிக்கிறான்;
திக்கற்ற பிள்ளைகளுக்குச்
சகாயர் நீரே.

15. துன்மார்க்கனும் பொல்லாதவனு
மாயிருக்கிறவனுடைய
புயத்தை முறித்துவிடும்;
அவனுடைய ஆகாமியம்
காணாமற்போகுமட்டும்
அதைத் தேடி விசாரியும்.

16. **கர்த்தர்** சதாகாலங்களுக்கும்
ராஜாவாயிருக்கிறார்;
புறஜாதியார் அவருடைய
தேசத்திலிருந்து அழிந்து
போவார்கள்.

17. **கர்த்தாவே**, சிறுமைப்பட்ட
வர்களுடைய வேண்டுதலைக்
கேட்டிருக்கிறீர்;
அவர்கள் இருதயத்தை
ஸ்திரப்படுத்துவீர்.

18. மண்ணான மனுஷன்
இனிப் பலவந்தஞ்செய்யத்
தொடராதபடிக்கு, தேவரீர்
திக்கற்ற பிள்ளைகளுக்கும்
ஒடுக்கப்பட்டவர்களுக்கும்
நீதிசெய்ய உம்முடைய
செவிகளைச் சாய்த்துக்
கேட்டருளுவீர்.

## சங்கீதம் 11

(இராகத்தலைவனுக்கு
ஒப்புவிக்கப்பட்ட தாவீதின்
சங்கீதம்)

1. நான் **கர்த்தரை**
நம்பியிருக்கிறேன்;
பின்னை ஏன் நீங்கள்
என் ஆத்துமாவை நோக்கி:
பட்சியைப்போல
உன் மலைக்குப் பறந்துபோ
என்று சொல்லுகிறீர்கள்.

2. இதோ, துன்மார்க்கர் வில்லை
வளைத்து, செம்மையான
இருதயத்தார் மேல்
அந்தகாரத்தில் எய்யும்படி
தங்கள் அம்புகளை நாணிலே
தொடுக்கிறார்கள்.

3. அஸ்திபாரங்களும்
நிர்மூலமாகிறதே,
நீதிமான் என்னசெய்வான்?

4. **கர்த்தர்** தம்முடைய
பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்;
**கர்த்தருடைய** சிங்காசனம்
பரலோகத்தில் இருக்கிறது;
அவருடைய கண்கள்
மனுபுத்திரரைப் பார்க்கிறது;
அவருடைய இமைகள்
அவர்களைச் சோதித்தறிகிறது.

5. **கர்த்தர்** நீதிமானைச்
சோதித்தறிகிறார்;
துன்மார்க்கனையும்
கொடுமையில்
பிரியமுள்ளவனையும்
அவருடைய உள்ளம்
வெறுக்கிறது.

6. துன்மார்க்கர்மேல் கண்ணிகளை
வருஷிக்கப்பண்ணுவார்;
அக்கினியும் கந்தகமும்
கடுங்கோடைக் கொந்தளிப்பும்
அவர்கள் குடிக்கும்
பாத்திரத்தின் பங்கு.

7. **கர்த்தர்** நீதியுள்ளவர்,
நீதியின் மேல் பிரியப்படுவார்;
அவருடைய முகம்
செம்மையானவனை
நோக்கியிருக்கிறது.

## சங்கீதம் 12

(செமினீத்தென்னும் எண்ணரம்புக்
கிண்ணாரத்தில் வாசிக்க
இராகத்தலைவனுக்கு
ஒப்புவிக்கப்பட்ட தாவீதின்
சங்கீதம்)

1. இரட்சியும் **கர்த்தாவே**,
பக்தியுள்ளவன்
அற்றுப்போகிறான்;
உண்மையுள்ளவர்கள்
மனுபுத்திரரில்
குறைந்திருக்கிறார்கள்.

2. அவரவர் தங்கள் தோழரோடே
பொய்பேசுகிறார்கள்;
இச்சக உதடுகளால்
இருமனதாய்ப் பேசுகிறார்கள்.

3. இச்சகம்பேசுகிற
எல்லா உதடுகளையும்,
பெருமைகளைப் பேசுகிற
நாவையும் **கர்த்தர்**
அறுத்துப்போடுவார்.

4. அவர்கள்:எங்கள் நாவுகளால்
மேற்கொள்ளுவோம்,
எங்கள் உதடுகள்
எங்களுடையது;
யார் எங்களுக்கு ஆண்டவன்
என்று சொல்லுகிறார்கள்.

5. ஏழைகள்
பாழாக்கப்பட்டதினிமித்தமும்,
எளியவர்கள் விடும்
பெருமூச்சினிமித்தமும்,
நான் இப்பொழுது எழுந்து ,
அவன்மேல் சீறுகிறவர்களுக்கு
அவனைக் காத்துச்
சுகமாயிருக்கப்பண்ணுவேன்
என்று **கர்த்தர்** சொல்லுகிறார்.

6. **கர்த்தருடைய** சொற்கள்
மண் குகையில் ஏழுதரம்
உருக்கி, புடமிடப்பட்ட
வெள்ளிக்கொப்பான சுத்த
சொற்களாயிருக்கிறது.



7. **கர்த்தாவே,**
நீர் அவர்களைக் காப்பாற்றி,
அவர்களை என்றைக்கும்
இந்தச் சந்ததிக்கு விலக்கிக்
காத்துக்கொள்ளுவீர்.

8. மனுபுத்திரரில் சண்டாளர்
உயர்ந்திருக்கும்போது,
துன்மார்க்கர் எங்கும்
சுற்றித்திரிவார்கள்.

Phone : 8903011350,Email ID : selwynde @gmail. com

## சங்கீதம் 13

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)

1. **கர்த்தாவே,** எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர் எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்?

2. என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக் கொண்டிருப்பேன்? எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்?



3. என் தேவனாகிய **கர்த்தாவே,** நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்.

4. அவனை மேற்கொண்டேன் என்று என் பகைஞன் சொல்லாதபடிக்கும், நான் தள்ளாடுகிறதினால் என் சத்துருக்கள் களிகூராதபடிக்கும் இப்படிச் செய்தருளும்.

5. நான் உம்முடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்; உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்.

6. **கர்த்தர்** எனக்கு நன்மைசெய்தபடியால் அவரைப் பாடுவேன்.



## சங்கீதம் 14

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப் பட்ட தாவீதின் சங்கீதம்)

1. தேவன்இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை.

2. தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, **கர்த்தர்** பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

3. எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

4. அக்கிரமக்காரரில் ஒருவனுக்கும் அறிவு இல்லையோ? அப்பத்தைப் பட்சிக்கிறது போல, என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே; அவர்கள் **கர்த்தரைத்** தொழுதுகொள்ளுகிறதில்லை.

5. அங்கே அவர்கள் மிகவும் பயந்தார்கள்; தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறாரே.

6. சிறுமைப்பட்டவனுக்குக் **கர்த்தர்**அடைக்கலமாயிருக்கிறார் என்று சொல்லி, நீங்கள் அவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணினீர்கள்.

7. சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; **கர்த்தர்** தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்.

## சங்கீதம் 15

(தாவீதின் சங்கீதம்)

1. **கர்த்தாவே,** யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?

2. உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.

3. அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.

4. ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன்; **கர்த்தருக்குப்** பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்; ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.

5. தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான், இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.

## சங்கீதம் 16

(தாவீது எழுதின மிக்தாம் என்னும் பொற்பணதிக்கீதம்)



1. தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன்.

2. என் நெஞ்சமே, நீ **கர்த்தரை** நோக்கி: தேவரீர், என் ஆண்டவராயிருக்கிறீர், என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல்;

3. பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும், அது வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னாய்.

4. அந்நியதேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்; அவர்கள் செலுத்துகிற இரத்தபானபலிகளை நான் செலுத்தமாட்டேன், அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன்.

5. **கர்த்தர்** என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்; என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர்.

6. நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு.

7. எனக்கு ஆலோசனை தந்த **கர்த்தரைத்** துதிப்பேன்; இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்.

8. **கர்த்தரை** எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.

9. ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்.

10. என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.

11. ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.




## சங்கீதம் 17
### (தாவீதின் விண்ணப்பம்)

1. **கர்த்தாவே** நியாயத்தைக் கேட்டருளும், என் கூப்பிடுதலைக் கவனியும்; கபடமில்லாத உதடுகளினின்று பிறக்கும் என் விண்ணப்பத்திற்குச் செவிகொடும்.



2. உம்முடைய சந்நிதியிலிருந்து என் நியாயம் வெளிப்படுவதாக; உம்முடைய கண்கள் நியாயமானவைகளை நோக்குவதாக.

3. நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப்பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர்; என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம் பண்ணினேன்.

4. மனுஷரின் செய்கைகளைக் குறித்து, நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக் கொள்ளுகிறேன்.



5. என் காலடிகள் வழுவாதபடிக்கு, என் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும்.

6. தேவனே, நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன், எனக்குச் செவிகொடுக்கிறீர்; என்னிடத்தில் உம்முடைய செவியைச் சாய்த்து, என் வார்த்தையைக் கேட்டருளும்.



7. உம்மை நம்புகிறவர்களை
அவர்களுக்கு விரோதமாய்
எழும்புகிறவர்களினின்று
உமது வலதுகரத்தினால்
தப்புவித்து இரட்சிக்கிறவரே!
உம்முடைய அதிசயமான
கிருபையை விளங்கப்பண்ணும்.

8. கண்மணியைப்போல
என்னைக் காத்தருளும்.



9. என்னை ஒடுக்குகிற
துன்மார்க்கருக்கும்,
என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற
என் பிராணப்பகைஞருக்கும்
மறைவாக, உம்முடைய
செட்டைகளின் நிழலிலே
என்னைக் காப்பாற்றும்.

10. அவர்கள்
நிணந்துன்னியிருக்கிறார்கள்,
தங்கள் வாயினால்
வீம்பு பேசுகிறார்கள்.

11. நாங்கள் செல்லும் பாதைகளில்
இப்பொழுது எங்களை
வளைந்துகொண்டார்கள்;
எங்களைத் தரையிலே
தள்ளும்படி அவர்கள் கண்கள்
எங்களை நோக்கிக்
கொண்டிருக்கிறது.

12. பீறுகிறதற்கு
ஆவலுள்ள
சிங்கத்துக்கும்,
மறைவிடங்களில்
பதிவிருக்கிற
பால சிங்கத்துக்கும்
ஒப்பாயிருக்கிறார்கள்.



13. **கர்த்தாவே,** நீர் எழுந்திருந்து,
அவனுக்கு எதிரிட்டு,
அவனை மடங்கடியும்;
**கர்த்தாவே,** என் ஆத்துமாவைத்
துன்மார்க்கருடைய கைக்கு
உம்முடைய பட்டயத்தினால்
தப்புவியும்.

14. மனுஷருடைய கைக்கும்,
இம்மையில் தங்கள் பங்கைப்
பெற்றிருக்கிற உலகமக்களின்
கைக்கும் உம்முடைய கரத்தினால்
என்னைத் தப்புவியும்;
அவர்கள் வயிற்றை
உமது திரவியத்தினால் நிரப்புகிறீர்;
அவர்கள் புத்திரபாக்கியத்தினால்
திருப்தியடைந்து,
தங்களுக்கு மீதியான
பொருளைத்
தங்கள் குழந்தைகளுக்கு
வைக்கிறார்கள்.

15. நானோ நீதியில் உம்முடைய
முகத்தைத் தரிசிப்பேன்;
நான் விழிக்கும்போது
உமது சாயலால்
திருப்தியாவேன்.



## ஜெப வார்த்தைகள்

கேட்டருளும் 1, 6
கவனியும் 1,
ஸ்திரப்படுத்தும் 5
விளங்கப்பண்ணும் 7
காத்தருளும் 8
காப்பாற்றும் 9
தப்புவியும் 7, 13, 14,



(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம். **கர்த்தருடைய** தாசனாகிய தாவீது இந்தப் பாட்டின் வார்த்தைகளைக் **கர்த்தர்** தன்னைத் தன்னுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும் சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்த நாளிலே பாடினது)

1. என் பெலனாகிய **கர்த்தாவே,** உம்மில் அன்புகூருவேன்.

2. **கர்த்தர்** என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும்,என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்.

3. துதிக்குப் பாத்திரராகிய **கர்த்தரை** நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவேன்.

4. மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக் கொண்டது; துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது.

5. பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டது; மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது.

6. எனக்கு உண்டான நெருக்கத்திலே **கர்த்தரை** நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று.



7. அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது, அவர் கோபங்கொண்டபடியால் பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது.

8. அவர் நாசியிலிருந்து புகை எழும்பிற்று, அவர் வாயிலிருந்து பட்சிக்கிற அக்கினி புறப்பட்டது; அதனால் தழல்மூண்டது.

9. வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்; அவர் பாதங்களின் கீழ் காரிருள் இருந்தது.

10. கேருபீன்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார்; காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார்.

11. இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார்; கரும்புனல்களையும், ஆகாயத்துக் கார்மேகங்களையும் தம்மைச் சூழக் கூடாரமாக்கினார்.

12. அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் அவருடைய மேகங்கள் பறந்து விலகிற்று, கல்மழையும், நெருப்புத்தழலும் விழுந்தது.

13. **கர்த்தர்** வானங்களிலே குமுறினார், உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்; கல்மழையும், நெருப்புத்தழலும் விழுந்தது.



14. தம்முடைய அம்புகளை எய்து,
அவர்களைச் சிதறடித்தார்;
மின்னல்களைப் பிரயோகித்து,
அவர்களைக் கலங்கப்பண்ணினார்.

15. அப்பொழுது **கர்த்தாவே,**
உம்முடைய கண்டிதத்தினாலும்
உம்முடைய நாசியின்
சுவாசக்காற்றினாலும்,
தண்ணீர்களின் மதகுகள்
திறவுண்டு, பூதலத்தின்
அஸ்திபாரங்கள் காணப்பட்டது.

16. உயரத்திலிருந்து
அவர் கைநீட்டி, என்னைப்
பிடித்து, ஜலப்பிரவாகத்திலிருக்கிற
என்னைத் தூக்கிவிட்டார்.

17. என்னிலும் அதிக
பலவான்களாயிருந்த
என் பலத்த சத்துருவுக்கும்,
என்னைப் பகைக்கிறவர்களுக்கும்
என்னை விடுவித்தார்.

18. என் ஆபத்துநாளில்
எனக்கு எதிரிட்டு வந்தார்கள்;
**கர்த்தரோ** எனக்கு
ஆதரவாயிருந்தார்.

19. அவர் விசாலமான இடத்திலே
என்னைக் கொண்டுவந்து,
என்மேல் பிரியமாயிருந்தபடியால்,
என்னைத் தப்புவித்தார்.

20. **கர்த்தர்** என் நீதிக்குத்தக்கதாக
எனக்குப் பதிலளித்தார்;
என் கைகளின்
சுத்தத்திற்குத்தக்கதாக
எனக்குச் சரிக்கட்டினார்.

21. **கர்த்தருடைய** வழிகளைக்
கைக்கொண்டுவந்தேன்;
நான் என் தேவனுக்குத்
துரோகம் பண்ணினதில்லை.

22. அவருடைய
நியாயங்களையெல்லாம்
எனக்கு முன்பாக நிறுத்தினேன்;
அவருடைய பிரமாணங்களை
நான் தள்ளிப்போடவில்லை.

23. அவர் முன்பாக
நான் மனவுண்மையாயிருந்து,
என் துர்க்குணத்துக்கு
என்னை விலக்கிக் காத்துக்
கொண்டேன்.

24. ஆகையால் **கர்த்தர்**
என் நீதிக்கும், தம்முடைய
கண்களுக்கு முன்னிருக்கிற
என் கைகளின் சுத்தத்திற்கும்
தக்கதாக எனக்குப்
பலனளித்தார்.

25. தயவுள்ளவனுக்கு
நீர் தயவுள்ளவராகவும்,
உத்தமனுக்கு நீர் உத்தமராகவும்;

26. புனிதனுக்கு நீர் புனிதராகவும்,
மாறுபாடுள்ளவனுக்கு
நீர் மாறுபடுகிறவராகவும்
தோன்றுவீர்.

27. தேவரீர் சிறுமைப்பட்ட
ஜனத்தை இரட்சிப்பீர்;
மேட்டிமையான கண்களைத்
தாழ்த்துவீர்.

28. தேவரீர் என் விளக்கை
ஏற்றுவீர்; என் தேவனாகிய
**கர்த்தர்** என் இருளை
வெளிச்சமாக்குவார்.

29. உம்மாலே
நான் ஒரு சேனைக்குள்
பாய்ந்துபோவேன்;
என் தேவனாலே
ஒரு மதிலைத் தாண்டுவேன்.

30. தேவனுடைய
வழி உத்தமமானது;

**கர்த்தருடைய** வசனம்
புடமிடப்பட்டது;
தம்மை நம்புகிற அனைவருக்கும்
அவர் கேடகமாயிருக்கிறார்.

31. **கர்த்தரை**யல்லாமல்
தேவன் யார்?
நம்முடைய தேவனையன்றிக்
கன்மலையும் யார்?

32. என்னைப் பலத்தால்
இடைகட்டி, என் வழியைச்
செவ்வைப்படுத்துகிறவர்
தேவனே.



33. அவர் என் கால்களை
மான்களுடைய
கால்களைப் போலாக்கி,
என்னுடைய உயர்தலங்களில
என்னை நிறுத்துகிறார்.

34. வெண்கல வில்லும்
என் புயங்களால் வளையும்படி,
என் கைகளை யுத்தத்திற்குப்
பழக்குவிக்கிறார்.

35. உம்முடைய இரட்சிப்பின்
கேடகத்தையும் எனக்குத் தந்தீர்;
உம்முடைய வலதுகரம்
என்னைத் தாங்குகிறது;
உம்முடைய காருணியம்
என்னைப் பெரியவனாக்கும்.

36. என் கால்கள் வழுவாதபடிக்கு,
நான் நடக்கிற வழியை
அகலமாக்கினீர்.

37. என் சத்துருக்களைப்
பின்தொடர்ந்து, அவர்களைப்
பிடிப்பேன்; அவர்களை
நிர்மூலமாக்கும் வரைக்கும்
திரும்பேன்.

38. அவர்கள்
எழுந்திருக்கமாட்டாதபடிக்கு,
என் பாதங்களின்கீழ்
விழத்தக்கதாக
அவர்களை வெட்டினேன்.

39. யுத்தத்திற்கு நீர் என்னைப்
பலத்தால் இடைகட்டி,
என்மேல் எழும்பினவர்களை
என் கீழ் மடங்கப்பண்ணினீர்.

40. நான் என் பகைஞரைச்
சங்கரிக்கும்படியாக,
என் சத்துருக்களின் பிடரியை
எனக்கு ஒப்புக்கொடுத்தீர்.

41. அவர்கள் கூப்பிடுகிறார்கள்,
அவர்களை இரட்சிப்பார்
ஒருவருமில்லை; **கர்த்தரை**
நோக்கிக் கூப்பிடுகிறார்கள்,
அவர்களுக்கு அவர் உத்தரவு
கொடுக்கிறதில்லை.

42. நான் அவர்களைக்
காற்றுமுகத்திலே பறக்கிற
தூளாக இடித்து, தெருக்களிலுள்ள
சேற்றைப்போல்
அவர்களை எறிந்துபோடுகிறேன்.

43. ஜனங்களின் சண்டைகளுக்கு
நீர் என்னைத் தப்புவித்து,
ஜாதிகளுக்கு என்னைத்
தலைவனாக்குகிறீர்;
நான் அறியாத ஜனங்கள்
என்னைச் சேவிக்கிறார்கள்.

44. அவர்கள் என் சத்தத்தைக்
கேட்டவுடனே
எனக்குக் கீழ்ப்படிகிறார்கள்;
அந்நியரும் எனக்கு இச்சகம்
பேசி அடங்குகிறார்கள்.

45. அந்நியர்
முனைவிழுந்துபோய்,
தங்கள் அரண்களிலிருந்து
தத்தளிப்பாய்ப்
புறப்படுகிறார்கள்.

46. **கர்த்தர்** ஜீவனுள்ளவர்;
என் கன்மலையானவர்
துதிக்கப்படுவாராக;
என் இரட்சிப்பின் தேவன்
உயர்ந்திருப்பாராக.

47. அவர் எனக்காகப் பழிக்குப்
பழி வாங்கி, ஜனங்களை
எனக்குக் கீழ்ப்படுத்துகிற
தேவனானவர்.

48. அவரே என் சத்துருக்களுக்கு
என்னை விலக்கி
விடுவிக்கிறவர்;
எனக்கு விரோதமாய்
எழும்புகிறவர்கள்மேல்
என்னை நீர் உயர்த்தி,
கொடுமையான மனுஷனுக்கு
என்னைத் தப்புவிக்கிறீர்.

49. இதினிமித்தம் **கர்த்தாவே,**
ஜாதிகளுக்குள்ளே
உம்மைத் துதித்து,
உம்முடைய நாமத்திற்குச்
சங்கீதம் பாடுவேன்.

50. தாம் ஏற்படுத்தின
ராஜாவுக்கு மகத்தான
இரட்சிப்பை அளித்து,
தாம் அபிஷேகம்பண்ணின
தாவீதுக்கும்
அவன் சந்ததிக்கும்
சதாகாலமும்
கிருபை
செய்கிறார்.



## சங்கீதம் 19

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

1. வானங்கள் தேவனுடைய
மகிமையை வெளிப்படுத்துகிறது,
ஆகாயவிரிவு அவருடைய
கரங்களின் கிரியையை
அறிவிக்கிறது.

2. பகலுக்குப் பகல் வார்த்தை
களைப் பொழிகிறது, இரவுக்கு
இரவு அறிவைத் தெரிவிக்கிறது.

3. அவைகளுக்குப் பேச்சுமில்லை,
வார்த்தையுமில்லை,
அவைகளின் சத்தம்
கேட்கப்படுவதுமில்லை.

4. ஆகிலும், அவைகளின் சத்தம்
பூமியெங்கும், அவைகளின்
வசனங்கள் பூச்சக்கரத்துக்
கடைசிவரைக்கும் செல்லுகிறது;
அவைகளில் சூரியனுக்கு
ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்.

5. அது தன் மணவறையிலிருந்து
புறப்படுகிற மணவாளனைப்
போலிருந்து, பராக்கிரமசாலியைப்
போல் தன் பாதையில்
ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது.

6. அது வானங்களின்
ஒரு முனையிலிருந்து புறப்பட்டு,
அவைகளின் மறுமுனைவரைக்கும்
சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு
மறைவானது ஒன்றுமில்லை.



7. **கர்த்தருடைய** வேதம்
குறைவற்றதும், ஆத்துமாவை
உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது;
**கர்த்தருடைய** சாட்சி
சத்தியமும், பேதையை
ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.

8. **கர்த்தருடைய** நியாயங்கள்
செம்மையும், இருதயத்தைச்
சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது;
**கர்த்தருடைய** கற்பனை
தூய்மையும், கண்களைத்
தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.

9. **கர்த்தருக்குப்** பயப்படுகிற
பயம் சுத்தமும், என்றைக்கும்
நிலைக்கிறதுமாயிருக்கிறது;
**கர்த்தருடைய** நியாயங்கள்
உண்மையும்,அவைகள்
அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.

10. அவைகள் பொன்னிலும்,
மிகுந்த பசும்பொன்னிலும்
விரும்பப்படத்தக்கதும்,
தேனிலும் தேன்கூட்டிலிருந்து
ஒழுகும் தெளிதேனிலும்
மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.

11. அன்றியும் அவைகளால்
உமது அடியேன் எச்சரிக்கப்
படுகிறேன்; அவைகளைக்
கைக்கொள்ளுகிறதினால்
மிகுந்த பலன் உண்டு.

12. தன் பிழைகளை உணருகிறவன்
யார்? மறைவான குற்றங்களுக்கு
என்னை நீங்கலாக்கும்.

13. துணிகரமான பாவங்களுக்கு
உமது அடியேனை விலக்கிக்காரும்,
அவைகள் என்னை
ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்;
அப்பொழுது நான் உத்தமனாகி,
பெரும்பாதகத்துக்கு
நீங்கலாயிருப்பேன்.

14. என் கன்மலையும்
என் மீட்பருமாகிய **கர்த்தாவே,**
என் வாயின் வார்த்தைகளும்,
என் இருதயத்தின் தியானமும்,
உமது சமுகத்தில்
பிரீதியாயிருப்பதாக.

## சங்கீதம் 20
### (இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

1. ஆபத்துநாளிலே **கர்த்தர்**
உமது ஜெபத்தைக் கேட்பாராக;
யாக்கோபின் தேவனுடைய
நாமம் உமக்கு உயர்ந்த
அடைக்கலமாவதாக.

2. அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து
உமக்கு ஒத்தாசையனுப்பி,
சீயோனிலிருந்து
உம்மை ஆதரிப்பாராக.

3. நீர் செலுத்தும்
காணிக்கைகளையெல்லாம்
அவர் நினைத்து, உமது சர்வாங்க
தகனபலியைப் பிரியமாய்
ஏற்றுக்கொள்வாராக.(சேலா)

4. அவர் உமது மனவிருப்பத்தின்படி
உமக்குத் தந்தருளி,
உமது ஆலோசனைகளை
யெல்லாம் நிறைவேற்றுவாராக.

5. நாங்கள் உமது இரட்சிப்பினால்
மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய
நாமத்திலே கொடியேற்றுவோம்;
உமது வேண்டுதல்களை
யெல்லாம் **கர்த்தர்**
நிறைவேற்றுவாராக.



6. **கர்த்தர்** தாம் அபிஷேகம்
பண்ணினவரை இரட்சிக்கிறார்
என்பதை இப்பொழுது
அறிந்திருக்கிறேன்; தமது வலது
கரம் செய்யும் இரட்சிப்பின்
வல்லமைகளைக் காண்பித்து,
தமது பரிசுத்த வானத்திலிருந்து
அவருடைய ஜெபத்தைக்
கேட்பார்.

7. சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய **கர்த்தருடைய** நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்.

8. அவர்கள் முறிந்து விழுந்தார்கள்; நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்.

9. **கர்த்தாவே,** இரட்சியும், நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக.

## சங்கீதம் 21

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப் பட்ட தாவீதின் சங்கீதம்.)

1. **கர்த்தாவே,** உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார்; உம்முடைய இரட்சிப்பிலே எவ்வளவாய்க் களிகூருகிறார்!

2. அவருடைய மனவிருப்பத்தின் படி நீர் அவருக்குத் தந்தருளி, அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர். (சேலா)

3. உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு எதிர்கொண்டு வந்து, அவர் சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர்.

4. அவர் உம்மிடத்தில் ஆயுசைக் கேட்டார்; நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர்.

5. உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாயிருக்கிறது; மேன்மையையும் மகத்துவத்தையும் அவருக்கு அருளினீர்.

6. அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்.

7. ராஜா **கர்த்தர்**மேல் நம்பிக்கையாயிருக்கிறார்; உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார்.

8. உமது கை உமது சத்துருக்களெல்லாரையும் எட்டிப் பிடிக்கும்; உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும்.

9. உமது கோபத்தின் காலத்திலே அவர்களை அக்கினிச் சூளையாக்கிப் போடுவீர்; **கர்த்தர்** தமது கோபத்திலே அவர்களை அழிப்பார்; அக்கினி அவர்களைப் பட்சிக்கும்.

10. அவர்கள் கனியைப் பூமியிலிராதபடி நீர் அழித்து, அவர்கள் சந்ததியை மனுபுத்திரரிலிராதபடி ஒழியப்பண்ணுவீர்.

11. அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பொல்லாங்கு நினைத்தார்கள்; தீவினையை எத்தனம் பண்ணினார்கள்; ஒன்றும் வாய்க்காமற் போயிற்று.

12. அவர்களை இலக்காக வைத்து, உம்முடைய அம்புகளை நாணேற்றி அவர்கள் முகத்திற்கு நேரே விடுகிறீர்.

13. **கர்த்தாவே,** உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும்; அப்பொழுது உம்முடைய வல்லமையைப் பாடிக் கீர்த்தனம்பண்ணுவோம்.

(அகிலேத் ஷகார் என்னும் இராகத்தில் பாடி, இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

1. என் தேவனே,என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?

2. என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவு கொடீர்; இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை.

3. இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.



4. எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.

5. உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள்; உம்மை நம்பி வெட்கப்பட்டுப் போகாதிருந்தார்கள்.

6. நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்.

7. என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி:

8. **கர்த்தர்**மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டு விடட்டும் என்கிறார்கள்.

9. நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்; என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப் பண்ணினீர்.



10. கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்; நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.

11. என்னை விட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை.

12. அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்து கொண்டது.

13. பீறிக் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல், என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.



14. தண்ணீரைப் போல
ஊற்றுண்டேன்;
என் எலும்புகளெல்லாம்
கட்டுவிட்டது,
என் இருதயம் மெழுகுபோலாகி,
என் குடல்களின் நடுவே
உருகிற்று

15. என் பெலன் ஓட்டைப்போல்
காய்ந்தது; என் நாவு
மேல்வாயோடே
ஒட்டிக்கொண்டது; என்னை
மரணத் தூளிலே போடுகிறீர்.

16. நாய்கள்
என்னைச் சூழ்ந்திருக்கிறது;
பொல்லாதவர்களின் கூட்டம்
என்னை வளைந்துகொண்டது;
என் கைகளையும்
என் கால்களையும்
உருவக் குத்தினார்கள்.

17. என் எலும்புகளையெல்லாம்
நான் எண்ணலாம்;
அவர்கள் என்னை
நோக்கிப் பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள்.

18. என் வஸ்திரங்களைத்
தங்களுக்குள்ளே பங்கிட்டு,
என் உடையின் பேரில்
சீட்டுப்போடுகிறார்கள்.

19. ஆனாலும் **கர்த்தாவே,**
நீர் எனக்குத் தூரமாகாதேயும்;
என் பெலனே, எனக்குச் சகாயம்
பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்.

20. என் ஆத்துமாவைப்
பட்டயத்திற்கும்,
எனக்கு அருமையானதை
நாய்களின் துஷடத்தனத்திற்கும்
தப்புவியும்.

21. என்னைச் சிங்கத்தின்
வாயிலிருந்து இரட்சியும்;
நான் காண்டாமிருகத்தின்
கொம்புகளில் இருக்கும்போது
எனக்குச் செவிகொடுத்தருளினீர்.

22. உம்முடைய நாமத்தை
என் சகோதரருக்கு அறிவித்து,
சபை நடுவில்
உம்மைத் துதிப்பேன்.



23. **கர்த்தருக்குப்**
பயப்படுகிறவர்களே,
அவரைத் துதியுங்கள்;
யாக்கோபின் சந்ததியாரே,
நீங்கள் எல்லாரும்
அவரைக் கனம்பண்ணுங்கள்;
இஸ்ரவேலின் வம்சத்தாரே,
நீங்கள் எல்லாரும் அவர்பேரில்
பயபக்தியாயிருங்கள்.

24. உபத்திரவப்பட்டவனுடைய
உபத்திரவத்தை
அவர் அற்பமாயெண்ணாமலும்
அருவருக்காமலும்,
தம்முடைய முகத்தை
அவனுக்கு மறைக்காமலுமிருந்து,
தம்மைநோக்கி
அவன் கூப்பிடுகையில்
அவனைக் கேட்டருளினார்.

25. மகா சபையிலே
நான் உம்மைத் துதிப்பேன்;
அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு
முன்பாக என் பொருத்தனை
களைச் செலுத்துவேன்.

26. சாந்தகுணமுள்ளவர்கள்
புசித்துத் திருப்தியடைவார்கள்;
**கர்த்தரைத்** தேடுகிறவர்கள்
அவரைத் துதிப்பார்கள்;
உங்கள் இருதயம்
என்றென்றைக்கும் வாழும்.

27. பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து **கர்த்தரிடத்தில்** திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்.



28. ராஜ்யம் **கர்த்தருடையது;** அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.

29. பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப் பணிந்து கொள்வார்கள்; புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள், ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே.

30. ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்.



31. அவர்கள் வந்து: அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப்போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்.

## சங்கீதம் 23

### (தாவீதின் சங்கீதம்)



1. **கர்த்தர்** என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

2. அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.



3. அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

4. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

5. என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

6. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் **கர்த்தருடைய** வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

(தாவீதின் சங்கீதம்)

1. பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் **கர்த்தருடையது.**



2. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி, அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார்.

3. யார் **கர்த்தருடைய** பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

4. கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.





5. அவன் **கர்த்தரால்** ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்.

6. இதுவே அவரைத் தேடி விசாரித்து, அவருடைய சமுகத்தை நாடுகிற யாக்கோபு என்னும் சந்ததி. (சேலா)

7. வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்.

8. யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள **கர்த்தர்;** அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே.

9. வாசல்களே,உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்.



10. யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் **கர்த்தரானவர்;** அவரே மகிமையின் ராஜா. (சேலா)



# சங்கீதம் 25

(தாவீதின் சங்கீதம்)

1. **கர்த்தாவே,** உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

2. என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும் ; என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவிடாதேயும்.

3. உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்; முகாந்தரமில்லாமல் துரோகம்பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப் போவார்களாக.

4. **கர்த்தாவே,** உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்.

5. உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்.

6. **கர்த்தாவே** உம்முடைய இரக்கங்களையும் உம்முடைய காருணியங்களையும் நினைத்தருளும், அவைகள் அநாதி காலமுதல் இருக்கிறதே.

7. என் இளவயதின் பாவங்களையும் என் மீறுதல்களையும் நினையாதிரும்; **கர்த்தாவே,** உம்முடைய தயவினிமித்தம் என்னை உமது கிருபையின் படியே நினைத்தருளும்.

8. **கர்த்தர்** நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்; ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்.

9. சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.

10. **கர்த்தருடைய** உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்.

11. **கர்த்தாவே,** என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும்.

12. **கர்த்தருக்குப்** பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்.

13. அவன் ஆத்துமா நன்மையில் தங்கும்; அவன் சந்ததி பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளும்.

14. **கர்த்தருடைய** இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது ; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.

15. என் கண்கள் எப்போதும் **கர்த்தரை** நோக்கிக்கொண்டிருக்கிறது ; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்.

16. என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்; நான் தனித்தவனும் சிறுமைப் படுகிறவனுமாயிருக்கிறேன்.

17. என் இருதயத்தின்
வியாகுலங்கள் பெருகியிருக்கிறது ;
என் இடுக்கண்களுக்கு
என்னை நீங்கலாக்கிவிடும்.

18. என் துன்பத்தையும்
என் வருத்தத்தையும் பார்த்து,
என் பாவங்களையெல்லாம்
மன்னித்தருளும்.

19. என் சத்துருக்களைப் பாரும்;
அவர்கள் பெருகியிருந்து,
உக்கிரபகையாய் என்னைப்
பகைக்கிறார்கள்.

20. என் ஆத்துமாவைக் காப்பாற்றி
என்னை விடுவியும்;
நான் வெட்கப்பட்டுப்போகாதபடி
செய்யும்;
உம்மை நம்பியிருக்கிறேன்.

21. உத்தமமும் நேர்மையும்
என்னைக் காக்கக்கடவது ;
நான் உமக்குக் காத்திருக்கிறேன்.

22. தேவனே, இஸ்ரவேலை
அவனுடைய எல்லா
இக்கட்டுகளுக்கும்
நீங்கலாக்கி மீட்டுவிடும்.

## சங்கீதம் 26

(தாவீதின் சங்கீதம்)

1. **கர்த்தாவே**, என்னை நியாயம்
விசாரியும், நான் என் உத்தமத்திலே
நடக்கிறேன்; நான் **கர்த்தரை**
நம்பியிருக்கிறேன், ஆகையால்
நான் தள்ளாடுவதில்லை

2. **கர்த்தாவே,** என்னைப் பரீட்சித்து,
என்னைச் சோதித்துப்பாரும்;
என் உள்ளிந்திரியங்களையும்
என் இருதயத்தையும்
புடமிட்டுப்பாரும்.

3. உம்முடைய கிருபை என்
கண்களுக்கு முன்பாக இருக்கிறது ;
உம்முடைய சத்தியத்திலே
நடந்துகொள்ளுகிறேன்.

4. வீணரோடே நான் உட்காரவில்லை,
வஞ்சகரிடத்தில் நான் சேருவதில்லை

5. பொல்லாதவர்களின் கூட்டத்தைப்
பகைக்கிறேன்;
துன்மார்க்கரோடே உட்காரேன்.

6. **கர்த்தாவே**, நான் துதியின்
சத்தத்தை தொனிக்கப்பண்ணி,
உம்முடைய அதிசயங்களை
யெல்லாம் விவரிப்பதற்காக.

7. நான் குற்றமில்லாமையிலே
என் கைகளைக் கழுவி,
உம்முடைய பீடத்தைச்
சுற்றிவருகிறேன்.



8. **கர்த்தாவே**,
உமது ஆலயமாகிய
வாசஸ்தலத்தையும்,
உமது மகிமை
தங்கிய ஸ்தானத்தையும்
வாஞ்சிக்கிறேன்.

9. என் ஆத்துமாவைப்
பாவிகளோடும், என் ஜீவனை
இரத்தப்பிரியரோடுங்கூட
வாரிக்கொள்ளாதேயும்

10. அவர்கள் கைகளிலே
தீவினையிருக்கிறது;
அவர்கள் வலதுகை
பரிதானங்களால் நிறைந்திருக்கிறது.

11. நானோ என் உத்தமத்திலே
நடப்பேன் ; என்னை மீட்டுக்
கொண்டு என்மேல் இரக்கமாயிரும்.

12. என் கால் செம்மையான
இடத்திலே நிற்கிறது ; சபைகளிலே
நான் **கர்த்தரைத்** துதிப்பேன்.

## (தாவீதின் சங்கீதம்)

### 1-6 சூழ்நிலைகள்

1. **கர்த்தர்** என் வெளிச்சமும்,
என் இரட்சிப்புமானவர்,
யாருக்குப் பயப்படுவேன்?
**கர்த்தர்** என் ஜீவனின்
பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன் ?

2. என் சத்துருக்களும்
என் பகைஞருமாகிய
பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப்
பட்சிக்க , என்னை நெருக்குகையில்
அவர்களே இடறிவிழுந்தார்கள்.

3. எனக்கு விரோதமாக
ஒரு பாளயமிறங்கினாலும்,
என் இருதயம் பயப்படாது;
என் மேல் யுத்தம் எழும்பினாலும்,
இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.

4. **கர்த்தரிடத்தில்** ஒன்றை நான்
கேட்டேன், அதையே நாடுவேன்;
நான் **கர்த்தருடைய** மகிமையைப்
பார்க்கும்படியாகவும்,
அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி
செய்யும்படியாகவும், நான் என்
ஜீவனுள்ள நாளெல்லாம்
**கர்த்தருடைய** ஆலயத்தில்
தங்கியிருப்பதையே நாடுவேன்.

5. தீங்குநாளில் அவர் என்னைத்
தம்முடைய கூடாரத்தில்
மறைத்து, என்னைத் தமது கூடார
மறைவிலே ஒளித்துவைத்து,
என்னைக் கன்மலையின்மேல்
உயர்த்துவார்.

6. இப்பொழுது என் தலை என்னைச்
சுற்றிலும் இருக்கிற
என் சத்துருக்களுக்கு மேலாக
உயர்த்தப்படும்; அதினிமித்தம்
அவருடைய கூடாரத்திலே
நான் ஆனந்த பலிகளையிட்டு,
**கர்த்தரைப்** பாடி, அவரைக்
கீர்த்தனம்பண்ணுவேன்.

### 7-10 தவறுதல்கள்

7. **கர்த்தாவே,** நான் கூப்பிடுகிற
சத்தத்தை நீர் கேட்டு, எனக்கு இரங்கி,
எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்,

8. என் முகத்தைத் தேடுங்கள்
என்று சொன்னீரே, உம்முடைய
முகத்தையே தேடுவேன்
**கர்த்தாவே,** என்று என் இருதயம்
உம்மிடத்தில் சொல்லிற்று.

9. உமது முகத்தை எனக்கு
மறையாதேயும்; நீர் கோபத்துடன்
உமது அடியேனை விலக்கிப்
போடாதேயும்; நீரே எனக்குச்
சகாயர்; என் இரட்சிப்பின் தேவனே,
என்னை நெகிழவிடாமலும்
என்னைக் கைவிடாமலும் இரும்.

10. என் தகப்பனும் என் தாயும்
என்னைக் கைவிட்டாலும், **கர்த்தர்**
என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்.

### 11-14 எதிர் காலம்

11. **கர்த்தாவே,** உமது வழியை
எனக்குப் போதித்து,
என் எதிராளிகளினிமித்தம்
செவ்வையான பாதையில்
என்னை நடத்தும்.

12. என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு
என்னை ஒப்புக்கொடாதேயும்;
பொய்ச்சாட்சிகளும் ஆக்கிரமித்துச்
சீறுகிறவர்களும் எனக்கு
விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள்.

13. நானோ ஜீவனுள்ளோர்
தேசத்திலே **கர்த்தருடைய**
நன்மையைக் காண்பேன்
என்று விசுவாசியாதிருந்தால்
கெட்டுப்போயிருப்பேன்.

14. **கர்த்தருக்குக்** காத்திரு;
அவர் உன் இருதயத்தை
ஸ்திரப்படுத்துவார்;
திடமனதாயிருந்து,
**கர்த்தருக்கே** காத்திரு.

**(தாவீதின் சங்கீதம்)**

1. என் கன்மலையாகிய
**கர்த்தாவே,** உம்மை நோக்கிக்
கூப்பிடுகிறேன்;
நீர் கேளாதவர்போல
மவுனமாயிராதேயும்;
நீர் மவுனமாயிருந்தால்
நான் குழியில் இறங்குகிற
வர்களுக்கு ஒப்பாவேன்.

2. நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு,
உம்முடைய பரிசுத்த சந்நிதிக்கு
நேராகக் கையெடுக்கையில்,
என் விண்ணப்பங்களின்
சத்தத்தைக் கேட்டருளும்.



3. அயலானுக்குச் சமாதான
வாழ்த்துதலைச் சொல்லியும்,
தங்கள் இருதயங்களில்
பொல்லாப்பை வைத்திருக்கிற
துன்மார்க்கரோடும்
அக்கிரமக்காரரோடும்
என்னை வாரிக்கொள்ளாதேயும்.

4. அவர்களுடைய கிரியைகளுக்கும்
அவர்களுடைய நடத்தைகளின்
பொல்லாங்குக்கும் தக்கதாக
அவர்களுக்குச் செய்யும்;
அவர்கள் கைகளின்
செய்கைக்குத்தக்கதாக
அவர்களுக்கு அளியும்,
அவர்களுக்குச் சரிக்குச்
சரிக்கட்டும்.

5. அவர்கள் **கர்த்தருடைய**
செய்கைகளையும்
அவர் கரத்தின் கிரியைகளையும்
கவனியாதபடியால்,
அவர்களை இடித்துப்போடுவார்,
அவர்களைக் கட்டமாட்டார்.

6. **கர்த்தருக்கு** ஸ்தோத்திரம்;
அவர் என் விண்ணப்பங்களின்
சத்தத்தைக் கேட்டார்.

7. **கர்த்தர்** என் பெலனும்
என் கேடகமுமாயிருக்கிறார்;
என் இருதயம்
அவரை நம்பியிருந்தது;
நான் சகாயம் பெற்றேன்;
ஆகையால்
என் இருதயம் களிகூருகிறது;
என் பாட்டினால்
அவரைத் துதிப்பேன்.



8. **கர்த்தர்** அவர்களுடைய
பெலன்; அவரே தாம்
அபிஷேகம்பண்ணினவனுக்கு
அரணான அடைக்கலமானவர்.

9. தேவரீர் உமது ஜனத்தை
இரட்சித்து,
உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்;
அவர்களைப் போஷித்து,
அவர்களை என்றென்றைக்கும்
உயர்த்தியருளும்.



**(தாவீதின் சங்கீதம்)**

1. பலவான்களின் புத்திரரே, **கர்த்தருக்கு** மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; **கர்த்தருக்கே** அதைச் செலுத்துங்கள்.

2. **கர்த்தருடைய** நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே **கர்த்தரைத்** தொழுது கொள்ளுங்கள்.

3. **கர்த்தருடைய** சத்தம் தண்ணீர்களின்மேல் தொனிக்கிறது; மகிமையுள்ள தேவன் முழங்குகிறார்; **கர்த்தர்** திரளான தண்ணீர்களின்மேல் இருக்கிறார்.

4. **கர்த்தருடைய** சத்தம் வல்லமையுள்ளது; **கர்த்தருடைய** சத்தம் மகத்துவமுள்ளது.

5. **கர்த்தருடைய** சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது; **கர்த்தர்** லீபனோனின் கேதுரு மரங்களை முறிக்கிறார்.

6. அவைகளைக் கன்றுக்குட்டிகளைப் போலவும், லீபனோனையும் சீரியோனையும் காண்டாமிருகக் குட்டிகளைப் போலவும் துள்ளப்பண்ணுகிறார்.



7. **கர்த்தருடைய** சத்தம் அக்கினி ஜுவாலைகளைப் பிளக்கும்.

8. **கர்த்தருடைய** சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணும்; **கர்த்தர்** காதேஸ் வனாந்தரத்தை அதிரப்பண்ணுகிறார்.

9. **கர்த்தருடைய** சத்தம் பெண்மான்களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்கும்; அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்.



10. **கர்த்தர்** ஜலப்பிரவாகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறார்; **கர்த்தர்** என்றென்றைக்கும் ராஜாவாக வீற்றிருக்கிறார்.



11. **கர்த்தர்** தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்; **கர்த்தர்** தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.

**(கிரகப்பிரதிஷ்டையின் பாட்டாகிய தாவீதின் சங்கீதம்.)**

1. **கர்த்தாவே,**
என் சத்துருக்கள்
என்னை மேற்கொண்டு
மகிழவொட்டாமல்,
நீர் என்னைக் கைதூக்கி
எடுத்தபடியினால்,
நான் உம்மைப் போற்றுவேன்.

2. என் தேவனாகிய **கர்த்தாவே,**
உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்,
என்னை
நீர் குணமாக்கினீர்.



3. **கர்த்தாவே,**
நீர் என் ஆத்துமாவைப்
பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி,
நான் குழியில் இறங்காதபடி
என்னை உயிரோடே காத்தீர்.

4. **கர்த்தருடைய**
பரிசுத்தவான்களே,
அவரைக் கீர்த்தனம்பண்ணி,
அவருடைய பரிசுத்தத்தின்
நினைவுகூருதலைக்
கொண்டாடுங்கள்.

5.அவருடைய கோபம்
ஒரு நிமிஷம்,
அவருடைய தயவோ நீடிய
வாழ்வு; சாயங்காலத்தில்
அழுகை தங்கும்,
விடியற்காலத்திலே
களிப்புண்டாகும்.

6. நான் ஒருக்காலும்
அசைக்கப்படுவதில்லையென்று,
என் வாழ்விலே சொன்னேன்.

7. **கர்த்தாவே,** உம்முடைய
தயவினால் நீர் என் பர்வதத்தைத்
திடமாய் நிற்கப்பண்ணியிருந்தீர்;
உமது முகத்தை நீர்
மறைத்துக்கொண்ட போதோ
நான் கலங்கினவனானேன்.

8. நான் குழியில் இறங்குகையில்
என் இரத்தத்தால்
என்ன லாபமுண்டு?
புழுதி உம்மைத் துதித்து,
உமது சத்தியத்தை அறிவிக்குமோ?

9. **கர்த்தாவே,** நீர் எனக்குச்
செவிகொடுத்து என்மேல்
இரக்கமாயிரும்; **கர்த்தாவே,**
நீர் எனக்குச் சகாயராயிரும்
என்று சொல்லி;

10. **கர்த்தாவே,** உம்மை
நோக்கிக் கூப்பிட்டேன்;
**கர்த்தரை** நோக்கிக்
கெஞ்சினேன்.

11. என் புலம்பலை ஆனந்தக்
களிப்பாக மாறப்பண்ணினீர்;
என் மகிமை அமர்ந்திராமல்
உம்மைக் கீர்த்தனம்
பண்ணும்படியாக
நீர் என் இரட்டைக் களைந்து
போட்டு, மகிழ்ச்சியென்னும்
கட்டினால்
என்னை இடைகட்டினீர்.

12. என் தேவனாகிய **கர்த்தாவே,**
உம்மை என்றென்றைக்கும்
துதிப்பேன்.



**(தனிச்சுற்றுக்கு மட்டும் )**

Phone : 8903011350,Email ID : selwynde @gmail. com